**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**SC.No. 21/2018**

**18.09.2025**

P.W.12- குமார்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

என்னுடைய காயச்சான்றிதழில் காயம்பட்ட நபரை தாக்கியவர்கள் 8 நபர்கள் என்று கூறப்பட்டுள்ளது, அவர்களில் 6 நபர்கள் ஆண்கள் என்றும், 2 நபர்கள் பெண்கள் என்று குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 8 நபர்களும், அரிவாள் மற்றும் கத்தியால் தாக்கினார்கள் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். கம்பால் தாக்கியதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கு ஒரே ஒரு காயம் தான் உள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். காயத்தின் அளவு 3 செ.மீ ஆழம் காயம் என்பது அரிவாளால் தாக்கும் போது தாக்கப்பட்ட அரிவாளில் 3 செ.மீ அளவுக்கு ரத்தம் காணப்படும் என்றால் சரிதான். காயம்பட்ட நபரை என்னிடம் மருத்துவமனைக்கு வரும் போது காலை 9 மணி இருக்கும், மேற்படி நபர் காலை 2 மணிக்கு அரிவாளால் வெட்டப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு வரும்போது காயத்தில் ஏற்பட்ட ரத்தத்தின் வெளிப்பாடால் மயக்க நிலையை அடைவார் என்றால் காயத்தின் தன்மையை பொறுத்து ஏற்படும். அரிவாளால் வெட்டும்போது வெட்டு காயம் தான் ஏற்படும் என்றால் சரியல்ல, சிதைந்த காயமும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஆனால் அரிவாளால் அறுக்கும் போது வெட்டுகாயம் மட்டும் தான் ஏற்படும் என்றால் சரிதான். மதுரை இராசாசி மருத்துவமனையில் இருந்து கொடுக்கப்பட்ட கருத்தை என்னுடைய காயச்சான்றிதழுடன் இணைத்துள்ளேன் என்றால் மேற்படி காயச்சான்றிதழை மதுரை இராசாசி மருத்துவமனையில் இருந்து காவல் துறையிடம் கொடுப்பார்கள். மேற்படி அறிக்கையை காவல் துறையினர் என்னிடம் காண்பித்து அதன் அடிப்படையில் நான் காயச்சான்றிதழ் கொடுத்துள்ளேன். ஒருவரை கம்பால் பலமாக தாக்கும்போது வீக்ககாயம், சிதைந்த காயம், கன்றிய

காயம் ஏற்படும். எனது அறிக்கையில் மேற்படி காயங்கள் உள்ளதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மூச்சுக்குழலுக்கு பின்னால் உணவு குழல் இருக்கும், காயம் 3 செ.மீ என்பது தோல் பகுதியிலிருந்து மூச்சுகுழல் வரை காணப்படும். மருத்துவத்தின் படி தோலின் அடர்த்தி (கனம்) என்பது 0.5 செ.மீ என்றால் சரிதான். மூச்சுக்குழலில் காயம் ஏற்படும் போது தொடர்ச்சியாக 6 மணிநேரம் சுவாசிக்க முடியாது என்றால் சரிதான். கத்தியால் குத்தும் போது குத்து காயம் ஏற்படும் என்றால் சரிதான். காயத்தின் ஆழம் என்பது கத்தியின் உள்ளே சென்ற பாகம் வரை ரத்தம் இருக்கும் என்றால் சரிதான்.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.09.18 17:54:16 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.